# R 4741 (page 13)

# அதைரியம் அடைந்த ஒரு தீர்க்கதரிசி பயந்து ஓடுதல்

## A DISCOURAGED PROPHET'S FLIGHT

1 இராஜாக்கள் 19:1-8

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைவார்கள்." ஏசாயா 40:31

தீமையின் மேல் சத்தியத்தின், பாகாலின் மேல் தேவனுடைய ஒரு வெற்றியின் அடையாளம் தீர்க்கதரிசி எலியாவுக்கு மாபெரும் ஊக்கத்தைக் கொடுத்தது. அது தேவனுடைய வெற்றி, அதனிமித்தம் எலியா களிகூர்ந்தார். இந்த காரியத்தில் தெய்வீக பிரதிநிதியாக இருந்து அதிக அளவில் சந்தோஷமடைந்தார். இவர் ராணி யேசபேலின், எளிதில் அமைதிப்படுத்த முடியாத என்றென்றைக்குமான எதிரியாக ஆனார் என்பதை அவர் சீக்கிரத்தில் தெரிந்து கொண்டார். அவள் இந்த காரியத்தை தேவனுக்கும் பாகாலுக்கும் இடையேயான போர் என்று பார்க்காமல், தனக்கும் தீர்க்கத்தரிசி எலியாவுக்கும் இடையேயான போர் என்று நினைத்தாள். அவளுடைய தீர்க்கதரிசிகள் கொல்லப்பட்டதை அறிந்து கோபமடைந்து எலியாவுக்கும் இதே கதிதான் என்று சொல்லியனுப்பினாள். காரியங்கள் இப்படி மாறும் என்று எலியா எதிர்பார்க்கவில்லை.ராஜாவை சந்தித்து எண்ணூற்றி ஐம்பது பாகாலின் தீர்க்கதரிசிகளை தண்டிக்க தைரியங்கொண்டிருந்த எலியா, ஒரு ஸ்திரீயிடமிருந்து வந்த ஒரு வார்த்தையினால் தைரியம் இழந்தார். அவர் வனாந்தரத்துக்கு ஓடினார். தனது ஜீவனை தப்புவித்துக்கொள்ள ஓடிய அவர் தனது ஜீவனை எடுத்துக்கொள்ளும்படி கர்த்தரிடம் ஜெபித்தார். என்ன விநோதம்!

கடந்த பாடத்தில் நாம் பார்த்த எலியாவின் மார்க்கம், சுவிசேஷ யுகத்தில் சபையின் அனுபவத்தை நிழலாக காண்பிக்கும் பொருட்டே கொடுக்கப்பட்டது என்பதை நாம் மறவாதிருப்போமாக. இந்த அம்சத்தை நாம் இன்னும் சோதித்து ஒரு நிழல் பொருளை கவனிப்போம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யேசபேல் கர்த்தரின் சபையின் மக்களிடையே தப்பறையான போதகங்களை கற்பித்த ஒரு தப்பறையான சபை முறைமையை அடையாளப்படுத்துவதற்கு மாத்திரமல்ல, (அவளது கணவன் ஆகாப் சிவில் அதிகாரத்தையும், எலியா சபை வகுப்பாரையும் குறிக்கிறார்கள்) மூன்றரை வருடங்கள் மழை பெய்யாதிருந்தது கூட ஒரு நிழல் என்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்படுகிறது. மூன்றரை வருட காலப்பகுதி நான்கு தடவை குறிப்பிடப்பட்டு, அந்த காலப்பகுதியில் தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் வனாந்தர நிலைமையில் பொதுவாக உலகத்தின் கண்களிலிருந்து மறைக்கப்பட்டதை குறிப்பிடுகிறது. அந்த காலப்பகுதியில் ஜனங்களிடையே ஆவிக்குரிய பஞ்சம் ஏற்பட்டது. இந்த மூன்றரை வருடங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்றரை காலங்கள் என்றும் ஆயிரத்தி இருநூற்றி அறுபது நாட்கள் என்றும், நாற்பத்தி இரண்டு மாதங்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.(வெளிப்படுத்தின விசேஷம் 12:14; 12:6; 11:3; 13:5)

எனினும் வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிட்ட மூன்றரை காலங்கள் அடையாள பாஷையில் இருந்து, ஒரு நாள் என்பது ஒரு வருடத்தை குறிப்பிட்டு அது

ஆயிரத்தி இருநூற்றி அறுபது வருடங்களைக் காண்பிக்கிறது. இந்த வருடங்கள் கிபி 538 இல் ஆரம்பித்து 1798இல் முடிவடைந்தது என்று அநேகர் நம்புகிறார்கள். இப்படியாக காரியத்தை புரிந்து கொண்டவர்கள் 1798க்கு பிறகு வேதாகமத்தில் ஆர்வம் அதிகரித்து மழைக்கான (புத்துணர்ச்சி மற்றும் ஆசீர்வாதத்துக்கான) காலத்தை குறித்தது. அது கடந்த நூற்றாண்டு உலகத்திற்கு பெரிய அறிவொளியை கொண்டு வந்தது. எனினும் அந்த அடையாளமான வருடங்களை (ஆயிரத்தி இருநூற்றி அறுபது சொல்லர்த்தமான வருடங்களை) எலியாவின் வனாந்தர அனுபவங்களை மெய்யான காலப்பகுதியாக நாம் உபயோகிக்கலாம்.

இது உண்மையான உபயோகமாக இருந்தால் தேவனுடைய பரிசுத்தவான்களிடத்தில் ஒருஅளவான பயத்தையும் கோழைத்தனத்தையும் குறிப்பிடுவதாக இருக்கிறது. எலியா ஒளிந்துகொள்ள சென்றது பரிசுத்தவான்கள் மறைந்திருந்ததை குறிப்பிடுகிறது. அவர்கள் இரண்டாவது தடவையாக வனாந்தர நிலையில் இருந்த பொழுது தேவன் வழிநடத்தி முக்கியமான பாடங்களை போதித்தார். அவை எலியாவின் அனுபவத்திற்கு சம்பந்தப் பட்டதாக இருந்தன. பர்வதங்களை பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று காண்பிக்கப்பட்டது. ஆனால் அதில் கர்த்தர் வெளிப்படவில்லை. அது வல்லமையின் ஒரு விளக்கமாகவே இருந்தது. பிறகு அடுத்த பாடம் பூமி அதிர்ச்சி. அதிலும் கர்த்தர் வெளிப்படவில்லை. அதன் பிறகு அக்கினி உண்டாயிற்று. ஆனால் இதிலும் எலியாவால் கர்த்தரை உணர்ந்து கொள்ள முடியவில்லை. கடைசியாக அமர்ந்து மெல்லிய சத்தம் வந்தது. சத்தியமும் கிருபையுமான ஆச்சரியமான செய்தி வந்தது. எலியா மற்ற வெளிப்பாடுகளில் கர்த்தரை தெரிந்துகொள்ளாமல் இதில் தெரிந்துகொண்டார்.

மெய்யான எலியாவாகிய தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் தெய்வீக வல்லமையின் பல்வேறு வெளிப்பாடுகளின் வேறுபாடுகளை பல்வேறு செயல்கள் மூலம் கற்றுக்கொள்ளுகிறார்கள். சூறாவளியைப் போல வருகிற சச்சரவுகள் தற்கால சமூக முறைமைகளுக்கு அழிவை கொண்டு வருகின்றன. ஆனால் அது கர்த்தருடைய சத்தமல்ல, மனுக்குலத்தின் சத்தம், பூமி அதிர்ச்சி சமூக அமைதியின்மையை எழுச்சியை குறிக்கும். இதுவும் எலியாவுக்கு கர்த்தரின் செய்தியல்ல. உலகத்தில் அவர் பெற்றிருக்கிற வேறொரு சக்தி. அது அவரது குமாரனுடைய ராஜ்யத்திற்கு முன்னதாக தற்கால ஒழுங்குகளை குறிக்கிறது. இதுவும் கர்த்தரால் அல்ல. ஆனால் அனுமதிக்கிற வெறும் மனித உணர்வுகள். எலியா வகுப்பார் தங்களது இருதய காதுகளின் மூலம் கேட்கப்படும் அமர்ந்த மெல்லிய சத்தத்தின் மூலம் தேவனை புரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு மிகவும் அதிசயத்தக்க விதமாக கர்த்தரின் ஜனங்களிடத்தில் பேசப்படும் சத்தியத்தின் குரல், கர்த்தரின் வார்த்தையின் சத்தம். மெய்யான ஆகாப், யேசபேல் மற்றும் பிறருக்கு இன்னும் கேட்கப்படவில்லை. இது மெய்யான எலியா வகுப்பாருக்காகவே கொடுக்கப்படுகிறது.

## “நான் இன்னும் ஏழாயிரம் பேரை வைத்திருக்கிறேன்”

இந்த சத்தத்தை தாங்க முடியாமல் எலியா விசனமாயிருந்து, தேவனுடைய ஊழியக்காரர்களில் தான் மட்டுமே உயிரோடிருப்பதாக நினைத்து மரித்துபோவதற்கு விரும்பினார். தேவன் அவருக்கு கூறிய பதிலாவது: "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரயேலிலே நான் மீதியாக வைத்திருக்கிறேன்." அது போல இன்றைக்கு ஆவிக்குரிய இஸ்ரயேலரின் இரு வகுப்பார் இருக்கிறார்கள். ஒருவகுப்பார் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு வனாந்தர

நிலைமையிலிருக்கிறது. இன்னொரு பெரிய வகுப்பார் உண்மையான தேவனைத் தவிர வேறு யாரையும் அங்கீகரிக்காமலும் மற்றவர்களுக்கு முழங்கால் முடங்காமலும் இருந்தாலும் இன்னும் பாபிலோனில் இணைந்து, பிணைந்து இருக்கிறார்கள்.

---------------------